தகவல் படிவம்

# உங்கள் குழந்தைக்கு கக்குவான் இருமலிலிருந்து பாதுகாப்பு அளியுங்கள்



## கர்ப்ப காலத்தில் கக்குவான் இருமல் தடுப்பு மருந்தளிப்பதன் மூலம் புதிதாய்ப் பிறந்த உங்கள் குழந்தையை முதல் நாளிலிருந்தே பாதுகாக்க முடியும்.

### ெண்களுக்கான முக்கிய தகவல்கள்

- குழந்தைக்கு ஆறு வாரம் ஆகும்போது அதனது முதல் தடுப்பு மருந்தை குழந்தை பெறும் வரையில், உங்களது கர்ப்பத்தின் 28 ஆம் வாரத்தில் உங்களுக்கு கக்குவான் இருமல் தடுப்பு மருந்தளிப்பதே அதனைப் பாதுகாப்பதற்கான மிகச் சிறந்த வழியாகும்.
- கர்ப்பிணிப் பெண்களுக்கு தடுப்புமருந்தளிப்பது NSW இல் தற்போது இலவசமாகும்.
- இருப்பினும் ஆறு வாரத்தில் உங்கள் பிள்ளைக்கு கக்குவான் இருமல் தடுப்பு மருந்து அவசியமாகும்.
- கக்குவான் இருமல் பாரதூரமானதாகும் அத்துடன் அது உயிராபத்தை ஏற்படுத்தவல்லது.

## கக்குவான் இருமல் என்பது என்ன?

கக்குவான் இருமல் (பெர்ட்டஸ்ஸிஸ் என்றும் இது அழைக்கப்படுகிறது) என்பது தீவிரமாகத் தொற்றக்கூடிய பக்ரீரியா நோயாகும். இது தொடர்ச்சியான கடும் இருமலை ஏற்படுத்துகின்றது. வளர்ந்தோரில் இதன் அறிகுறிகள் மிதமானதாக இருக்கலாம், ஆனால் இதுவரை தடுப்புமருந்தளிக்கப்படாத குழந்தைக்கு அத்தொற்று பரவினால் அது உயிராபத்தை ஏற்படுத்தக்கூடும்.

## எனது குழந்தை அபாயத்தை எதிர்நோக்கும் நிலையில் உள்ளதா?

ஆம். குழந்தைகளுக்கு ஆறு வார வயதாகும் வரை கக்குவான் இருமலுக்கெதிராக தடுப்புமருந்தளிக்கப்பட முடியாது. ஒவ்வொரு கர்ப்ப காலத்திலும் கக்குவான் இருமல் தடுப்பு மருந்துகள் 28 ஆம் வாரத்தில் வழங்கப்படுவதே சிறந்ததாகும். இதன் மூலம் உங்கள் குழந்தை பிறக்கு முன்பு அதற்குரிய நோயெதிர்ப்புச் சக்திகளை உருவாக்கிக்கொள்ள அவகாசம் கிடைக்கிறது. உங்கள் குழந்தை பிறந்து ஆறு வாரமாகும் போது அதற்குரிய தடுப்பு மருந்துகளைப் பெறத் தயாராகும் வரை இந்நோயெதிர்ப்புச் சக்திகள் அதனைப் பாதுகாக்கின்றன.

## தடுப்புமருந்து பாதுகாப்பானதா?

ஆம், கர்ப்பகாலத்தில் வழங்கப்பட்டால் தடுப்புமருந்து கர்ப்பிணித் தாயிற்கும் சேயிற்கும் பாதுகாப்பானதாகும். அமெரிக்காவிலும் பிரித்தானியாவிலும் 40,000 இற்கும் அதிகமான கர்ப்பிணிப் பெண்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்போது தடுப்புமருந்தளிக்கப்பட்ட புயத்தில் வலி அல்லது செந்நிறம் போன்ற சிறு பக்கவிளைவுகள் பட்டுமே தென்பட்டன. அது கர்ப்ப காலத்தில் சிக்கல்கள் ஏற்படும் ஆபத்தை அதிகரிக்கச் செய்வதில்லை. கர்ப்பிணிப் பெண்களுக்கு அவர்களது மூன்றாம் மும்மாதத்தில் தடுப்புமருந்தளிக்கப்பட வேண்டுமென ‘தேசிய சுகாதார மற்றும் மருத்துவ ஆய்வுக் கவுன்ஸில்’ அண்மையில் தமது பரிந்துரைகளைப் புதுப்பித்துள்ளது.

## நான் என்ன செய்ய வேண்டும்?

மூன்றாம் மும்மாதத்தில் உங்களுக்குரிய இலவச கக்குவான் இருமல் தடுப்பு மருந்தைப் பெறுவது தொடர்பாக இன்றே உங்கள் மருத்துவருடன் பேசவும்.

கக்குவான் இருமலுக்கெதிரான நோய்த்தடுப்பு காலப்போக்கில் தளர்ந்துவிடும், எனவே ஒவ்வொரு கர்ப்ப காலத்தின் 28 ஆம் வார வாக்கிலும் உங்களுக்குத் தடுப்புமருந்தளிக்கப்பட வேண்டும்.

உங்கள் குழந்தையுடன் அதனது முதல் வாரங்களில் எவரெல்லாம் மிக நெருக்கமாக இருப்பார்களோ அவர்களும் கக்குவான் இருமல் தடுப்புமருந்து பெற்றுக்கொள்வது அவசியமாகும். உங்களது ஏனைய பிள்ளைகளும் அவர்களுக்கான முழுமையான தடுப்பு மருந்துகளைப் பெற்றிருப்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். அவ்வாறே கடந்த 10 ஆண்டுகளில் கக்குவான் இருமல் தடுப்புமருந்து பெற்றிராத குழந்தைப் பராமரிப்பாளர்களும், உங்கள் நெருங்கிய குடும்பத்தவர்களும் குழந்தையைத் தொடும் நிலை வருவதற்கு குறைந்தது இரண்டு வாரங்களுக்கு முன்பாவது அவர்களுக்குரிய தடுப்பு மருந்தினைப் பெற்றுக்கொள்ளும்படி கேட்கவும்.

சளிச்சுர தடுப்பு மருந்தை உங்கள் மருத்துவரிடமிருந்து கேட்டுப் பெறுவதன் மூலம் உங்களையும் உங்கள் குழந்தையையும் சளிச்சுரத்தின் அபாயகரமான பாதிப்புகளிலிருந்து கர்ப்ப காலத்தின் போது பாதுகாத்துக்கொள்ள முடியும். உங்கள் கர்ப்ப காலத்தின் எக்கால கட்டத்திலும் இத் தடுப்பு மருந்து கொடுக்கப்பட முடியும்.

***கர்ப்ப காலத்தில் இலவச கக்குவான் இருமல் தடுப்பு மருந்தைப் பெறுவதே புதிதாய்ப் பிறந்த உங்கள் குழந்தையை முதல் நாளிலிருந்தே பாதுகாப்பதற்கான சிறந்த வழியாகும். தடுப்பு மருந்தளிப்புகள் பற்றி இன்றே உங்கள் மருத்துவருடன் பேசவும்.***

கக்குவான் இருமல் பற்றிய மேலதிகத் தகவல்களை இவ்வலைத்தளத்தில் பெறலாம்
**www.health.nsw.gov.au/whoopingcough**

NSW GOVERNMENT | Health

Tamil

செல்க **health.nsw.gov.au/protectnewborns**